**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 18/2017** |
| Deposition of witness for | Prosecution **LW - 6 / PW - 6**<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **திரு.சேகர்** |
| Father's Name | : திரு. கண்ணைப்பன் |
| Village | : ராந்தம் |
| Taluk | : செய்யாறு |
| Calling | : விவசாயம் |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th Day of September 2025.

**(எதிரி ஆஜர்.)**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ராந்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ரமேஷை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்தான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் சம்பவம் நடந்து 3, 4 நாட்கள் கழித்து அ.சா.1 ரமேஷுக்கும் குருநாதனுக்கும் சண்டை என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள். மற்றபடி இந்த சம்பவம் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. யாருக்கு யாரால் என்ன காயம் ஏற்பட்டது என்று எனக்கு

எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலீசார் விசாரித்தபோதும் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :

1. நான் 10 வகுப்பு படித்துள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை வீட்டில் வந்த விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் உண்மையா பொய்யா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.12 19:17:30 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 18/2017** |
| Deposition of witness for | Prosecution **LW - 8 / PW - 7**<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **திரு. பிரபு** |
| Father's Name | : திரு. பூபாலன் |
| Village | : ராந்தம் |
| Taluk | : செய்யாறு |
| Calling | : விவசாயம் |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th Day of September 2025.

**(எதிரி ஆஜர்.)**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ராந்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ரமேஷை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்தான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ராந்தம் கூட்ரோட்டில்ல வேலைக்கு செல்வதற்காக காலை 10.00 – 11.00 மணியளவில் நான் நின்றுகொண்டிருந்தபோது, அந்த சமயத்தில்போலீசார் ஆஜர் எதிரியை தேடிக்கொண்டிருந்தார்கள். பின்னர், போலீசார் ஆஜர் எதிரியை அழைத்துக்கொண்டு சென்றபோது சாட்சியாக

என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் காவல் நிலையம் சென்று சாட்சி கையெழுத்து போட்டேன். மற்றபடி இந்த சம்பவம் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் எதிரி ரமேஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. என் முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை.

(சாட்சி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. கடந்த 08.06.2014 ம் தேதி பகல் 11.30 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த ஞானபிரகாசமும் ராந்தம் கூட்ரோட்டிடம் இருந்தபோது, மோரணம் காவல் நிலைய குற்ற எண். 63/2014 வழக்கில் எதிரி குருநாதன் என்பவரை போலீசார் கைது செய்து விசரணை செய்தபோது, அவர் தானாக முன்வந்து எவ்வித தூண்டுதல் மற்றும் அச்சுறுத்தலின்றி அவர் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், பின்னர் அவர் கொடுத்த அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த கொடுவாள் கத்தியை எதிரி கூறியதின் அடிப்படையில் போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றும்போது நானும் ஞானப்பிரகாசமும்

அதற்கு ஆதாரமாக சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.12 19:17:39 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**